10.02.2026

O.S.No. 26/2023

DW3– மாரிச்செல்வி – க/பெ. கருப்பசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. நான் 26.10.2023 ல் கிரையம் வாங்கியதாக சொல்லும் எனது கிரையதாரர்களுக்கு மூலப்பத்திரங்கள் கிடையாது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன். சொத்தின் முன் உரிமையாளர் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான், எனது தந்தை, தம்பி தான் விசாரித்தார்கள். நான் வாதியை பார்த்துள்ளேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதி எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது உறுதிக்கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்திற்கான புல எண்.49/2 எப். வழக்கு சொத்திற்கான பட்டா எண் தெரியாது. சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. வழக்கு சொத்திற்கு மேற்குபக்கம் யார்இடம் உள்ளது என்று தெரியாது. வழக்குசொத்தின் வடபுறம் மற்றும் தென்புறம் யார் இடம் என்று எனக்கு தெரியாது.வழக்கு சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல்அளவு தெரியாது.

3. நான் கிரையம் வாங்கிய சொத்தை நேரில் பார்த்துள்ளேன், அது நான் செல்லும் வழியில் உள்ளது. வழக்கு சொத்தை வாதிதான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல, 1ம்பிரதிவாதி தான் அனுபவம் செய்துவருகிறார். 1ம் பிரதிவாதி எனக்கு தாத்தா முறையாவார்.

4. 1ம் பிரதிவாதி தான் எனக்கு பிராது தபசில் சொத்தை கிரையம் செய்துகொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது, எனது தந்தைக்கும், தம்பிக்கும் தான் தெரியும். பத்திரம் எழுதும்போது நான் பார்க்கவில்லை, பதிவு செய்யும்போது கையொப்பம் செய்தேன். பத்திரம் எழுத தகவலை எனது தம்பி தான் கூறினார். அப்போது 1ம் பிரதிவாதி உடனிருந்தாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி சொல்லிதான் எனக்கு வழக்குவிவரம் தெரியுமா என்றால் அவரும், எனது தந்தையும் சொல்லிதான் தெரியும். 1ம் பிரதிவாதி கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் முதல்விசாரணை உறுதிக்கூற்று தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்விசாரணை உறுதிக்கூற்றில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆதரவாக வழக்கிற்கு பின்னிட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி